1381

# வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா தெற்கு

## மூன்றாந் தவணைப் பரீட்சை – 2020

**தரம் - 06** **கணிதம்** **நேரம்: 2 மணித்தியாலங்கள்**

பகுதி I

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.**

1) முக்கோண எண்கோலத்தில் அடுத்துவரும் இரு உறுப்புக்களையும் எழுதுக.

1 , 3 , 6 , ……. , ……..

2) திணிவை அளக்கப் பயன்படும் இரு அலகுகள் யாவை?

3) 47 ஐ கிட்டிய 10 ற்கு மட்டந்தட்டி எழுதுக.

4) 15 நிமிடங்கள் = ………… செக்கன்கள் ஆகும்.

5) 7 >(-8) என்பதை சொற்களில் எழுதுக.

6) இன்றைய திகதியை நியம வடிவில் எழுதுக.


7) 23.07 km ஐ மீற்றரில் தருக.

8) $\frac{2}{5}+\frac{3}{7}$ ஐச் சுருக்குக.

9) 82065 எனும் எண்ணில் 2 குறிக்கும் இடப்பெறுமானம் யாது?

10) மாலா பி.ப 7.28 மணியளவில் கொழும்பு செல்வதற்காக பேரூந்தில் புறப்பட்டுச் சென்றாள் எனின் அவள் புறப்பட்ட நேரத்தை நியம வடிவில் தருக.

11) இவ்வுருவின் சுற்றளவைக் காண்க.





12) $2^3 \times 5^2$ என்பதை விரித்தெழுதிப் பெறுமானம் காண்க.

13) 3 : 4 எனும் விகிகதத்திற்கு சமவலு விகிதம் ஒன்று தருக.

14) 17 எனும் எண்ணை வரவுக்குறி மூலம் குறிப்பிடுக.

15) 1 ற்கும் 20 ற்கும் இடையிலுள்ள 4 இன் மடங்குகள் நான்கினை எழுதுக.

16) $\frac{3}{8}$ எனும் பின்னத்தை உருவில் நிழற்றுக.



17) இரண்டு செங்கோணங்களின் பருமனுக்குச் சமனான பருமனைக்கொண்ட கோணம் ………………………………….. எனப்படும்.

18) சுருக்குக. 3582 – 789

19) D எனும் எழுத்திற்கு கிடையாகவும், நிலைக்குத்தாகவும் உள்ள எழுத்துக்கள் ஒவ்வொன்று வீதம் தருக.

| | | | |
|---|---|---|---|
| A | | B | |
| | C | | F |
| D | | E | G |

20) நேர் விளிம்பைப் பயன்படுத்தி 7cm நீளமான நேர்கோடு ஒன்றை வரைக?

Education கல்வி



kalvi.lk

## பகுதி II

**முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களிற்கு விடை தருக.**

**01.** திரவங்களை அளவிடல் தொடர்பாக வகுப்பறையில் மேற்கொண்ட செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.

i. திரவங்களை அளப்பதற்கு நீங்கள் பயன்படுத்திய உபகரணங்கள் 2 தருக?

ii. திரவங்களை அளக்கப் பயன்படும் அலகுகள் 2 தருக.

iii. நீர் பயன்பத்திய உபகரணங்களில் குறிக்கப்பட்டுள்ள அளவீடுகள் 2 தருக.

iv. விழா ஒன்றில் கலந்து கொண்ட விருந்தினர்களுக்கு வழங்குவதற்காக பழப்பாணம் தயாரிக்குமாறு ஆசிரியர் கூறினார். இங்கு பழச்சாறு 1250 மில்லி லீற்றரும், நீர் 1750 மில்லி லீற்றரும் கலக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

*a)* இப்பழப்பானத்தை தயாரிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய உபகரணங்கள் மற்றும் தடவைகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.

*b)* தயாரிக்கப்பட்ட கலவையின் மொத்த அளவு யாது?

v. *a)* 7 *l* 375 *ml* + ................. *ml*

*c)* 13000 *ml* = .............. *l*

vi. *a)*

| *l* | *ml* |
|---|---|
| 3 | 465 |
| + 2 | 236 |
| ........ | ........ |

*b)*

| *l* | *ml* |
|---|---|
| 18 | 603 |
| 9 | 250 |
| ........ | ........ |

(2+2+2+2+2+1+1+2+2 = 16 புள்ளிகள்)

**02.**

i) கீழே தரப்பட்டுள்ள தளவுருக்களை மட்டும் பயன்படுத்தி உருவாக்ககூடிய திண்மப் பொருட்கள் ஒன்று வீதம் தருக.


*a)* செவ்வகம் : ..................

*b)* சதுரம் : ..................

*c)* முக்கோணி : ..................

ii) சதுரத்தின் பண்புகள் 2 தருக.

iii) ஒழுங்கான நான்முகியின் வலை ஒன்று தரப்பட்டுள்ளது.




a. முகமொன்றின் வடிவம் யாது?

b. தரப்பட்ட உருவிற்கு ஏற்ப நான்முகியின் ஒரு விளிம்பின் நீளம் யாது?

**c.** மேற்காட்டியவாறான இரு நான்முகிகள் அடி ஒன்றுடன் ஒன்று பொருந்தும் வகையில் சேர்த்து உருவாக்கப்பட்ட கூட்டுத் திண்மத்தில்.

i) உச்சிகளின் எண்ணிக்கை : ..................

ii) விளிம்புகளின் எண்ணிக்கை : ..................

iii) முகங்களின் எண்ணிக்கை : ..................

என்பவற்றைக் காண்க. (3+2+1+2+3 = 11 புள்ளிகள்)



kalvi.lk

**03.**

i) $16 = 2 = 4$ எனின் வெற்றுக் கூடுகளுக்குப் பொருத்தமான எண்களை இடுக.

ii) $3^2 \times 2^2$ என்பதை விரித்தெழுதிப் பெறுமானம் காண்க.

iii) வெற்றுக்கூடுகளுக்குப் பொருத்தமான எண்களை இடுக.

a) $64 = 2$  b) $64 = 4$  c) $64 = 8$

iv) *1024* என்பதை

*a)* *2* இன் வலுவாகத் தருக.  *b)* *4* இன் வலுவாகத் தருக

(2 + 2 + 3 + 4 = 11 புள்ளிகள் )

**04. வாரமொன்றின் 5 நாட்களில் தரம் 6 இல் கல்வி பயிலும் மாணவர்களின் வரவு பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.**

| நாள் | வரவு |
|---|---|
| திங்கள் | 28 |
| செவ்வாய் | 44 |
| புதன் | 40 |
| வியாழன் | 32 |
| வெள்ளி | 36 |

i) மாணவர்களில் 8 பேரைக் குறிப்பதற்கு எனும் குறியீட்டைப் பயன்படுத்தி செவ்வாய்க்கிழமை மாணவர்களின் வரவைக் காட்டுவதற்கு பட வரைபு ஒன்றை வரைக.

ii) செவ்வாய்க்கிழமை வருகை தந்த மாணவர்களின் எண்ணிக்கையை வரவுக்குறி மூலம் காட்டுக.

iii) கூடுதலான மாணவர்கள் வருகை தந்த எண்ணிக்கைக்கும் குறைந்தளவு மாணவர்கள் வருகை தந்த எண்ணிக்கைக்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு?

iv) வாரத்தின் 5 நாட்களிலும் வருகை தந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(5+2+2+2 = 11 புள்ளிகள்)

**05.**

i) சமவலுப்பின்னம் ஒன்று தருக. $\frac{2}{5}$

ii) சுருக்குக.

a) $\frac{3}{7} + \frac{2}{7}$  b. $\frac{1}{4} + \frac{4}{9}$  c. $\frac{7}{16} - \frac{1}{4}$  d. $0.73 + 0.21$  e. $15.08 - 3.84$

(1+2+2+2+2+2 = 11 புள்ளிகள்)

**06.**

i) தரப்பட்ட எண்களைப் பயன்படுத்டதி கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

836 , 457 , 950 , 650 , 895 , 2031

a) 2 ஆல் மீதியின்றி வகுபடும் எண்கள் எவை?

b) 5 ஆல் மீதியின்றி வகுபடும் எண்கள் எவை?

c) 2 ஆலும் 5 ஆலும் வகுபடும் எண்கள் எவை?

ii) இடைவெளி நிரப்புக.

a) 1 x ……. = 12  b) 2 x ….. = 12  c) 3 x ….. = 12

iii) 12 இன் காரணிகள் எவை?  iv) 16 இன் காரணிகள் எவை?

v) 12, 16 ஆகியவற்றின் பொதுக்காரணிகள் எவை?

(3+3+1+2+2= 11 புள்ளிகள்)

**06.**

i) பின்வரும் அனைத்து இலக்கங்களையும் 8, 2, 3, 5, 6 ஒரு தடவை மட்டும் பயன்படுத்தி.

a) எழுதக்கூடிய மிகப்பெரிய ஐந்திலக்க எண் யாது?

b) எழுதக்கூடிய மிகச்சிறிய ஐந்திலக்க எண் யாது?

ii) 5873650912 எனும் எண்ணை

a) நியம வடிவில் தருக.  b) சொற்களில் எழுதுக.

iii) 3867 எனும் எண்ணில் 6 இனால் வகைக்குறிக்கப்படும் எண்ணின் பெறுமானத்திற்கும் 8 இனால் வகைக்குறிக்கப்படும் எண்ணின் பெறுமான த்திற்கும் இடையிலான வித்தியாசம் யாது?

(4+4+3= 11 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

## REVISION | PAPER DISCUSSION

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

### கட்டண விபரங்கள்

தமிழ் Medium

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

English Medium

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457